ESIOP. No. 3/2023
07-09-2023

P.W.1 மணிகண்டன்
குறுக்கு விசாரணை

நீங்கள் தாக்கல் செய்துள்ள பிரதான மனுவை நீங்கள் சொல்லி தயார் செய்து அதை நீங்கள் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டுள்ளீர்கள் என்றால் சரி. மனுவில் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் Machine Operator மற்றும் Mechanic பணி பார்த்தீர்கள் என்பதற்கு ஆவண ஆதாரம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் அவர்கள் யாருக்கும் அடையாள அட்டை கொடுக்கவில்லை. நீங்கள் என்ன படித்துறள்ளீர்கள் என்றால் ITI Mechanic படித்துள்ளேன். அதற்கான ஆவண ஆதாரம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் போட்டுள்ளேன். நீக்னள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் நீங்கள் சொன்ன ஆவணம் இல்லை வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் பணி பார்த்தாக சொல்லும் DK Section உள்ள விகாஸ் Automatic Machine என்பது Automatic -ஆ அல்லது Semi Automatic-ஆ என்றால் Semi Automatic தான். விகாஸ் Automatic Machine என்பது Automatic தான் ஆனால் நீங்கள் வழக்கிற்காக Semi Automatic என்று பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. Automatic Machine நின்ற பிறகு தான் அதை திறந்து பழுது பார்க்க முடியும் என்றால் சரி, ஆனால் Automatic Machine Running -ல் இருக்கும் போது அதன் தொடர்புடைய Bypass-ல் பழுது ஏற்பட்டிருந்தால் அதை சரிபார்க்க முடியும். Ex. P. 6 -ல் நீங்கள் தான் ரேகை வைத்துள்ளீர்கள் என்றால் சரி. அந்த ஆவணத்தில் உங்களை Machine Operator என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றால் R1-ன் HR Manager என்னிடம் வீட்டில் வந்து கைரேகை வாங்கினார், அப்போது அவரிடம் Machine Operator என்று உள்ளதை Mechanic என்றும் என்னுடைய கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை Bypass-ல் பழுது பார்க்கும் போது ஏற்பட்ட விபத்து என்று மாற்றி எழுதுமாறு கேட்டிருந்தும் அவர்

அதை மாற்றாமல் கைரேகை போட்டால் தான் Operation –க்கு அனுமதிப்பதாக சொன்னார் அதனால் கைரேகை வைத்தேன். இந்த சங்கதிகளை உங்கள் பிரதான மனுவில் சொல்லாமல் தற்போது தான் முதல் முறையாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. Ex. P. 41–நீங்கள்அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் வெறுமனே DK Section–ல் வேலை பார்த்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது நீங்கள் Operator ஆக இருந்தீர்களா Mechanic ஆக இருந்தீர்களா என்று குறிப்பிடவில்லை என்றால் சரி. உங்கள் பிரதான மனுவில் DK Section–ல் வேலை பார்த்த போது G Matic தைவான் மாடல் எண்–1 வேலை பார்த்ததாக சொல்லியுள்ளீர்கள் அது எதன் அடிப்படையில் வேலை பார்த்தீர்கள் என்றால் DK Section மொத்தம் 4 இயந்திரங்கள் உள்ளன மொத்தம் 3 Operator உள்ளோம் அதில் நானும் ஒருவர் அன்றைய தினம் ஒரு Operator வரவில்லை ஆகையால் நாங்கள் இருவர் தான் இயந்திரங்களை பார்த்துக்கொண்டோம். G Matic தைவான் நின்று போனதை மெயின்டணன்ஸ் துறைக்கு சொன்னீர்களா என்றால் மெயின்டணன்ஸ் பிரிவே கிடையாது ஆப்பரேடர் மற்றும் மெக்கானிகாக உள்ள நாங்கள் தான் பார்ப்போம். பெரிய பழுது ஏற்பட்டால் யாருக்கு சொல்வீர்கள் என்றால் முதலில் சூப்ரவைசருக்கு தெரிவிப்போம் பிறகு உரிமையாளருக்கு நாங்களும் தெரிவிப்போம் சூப்ரவைசரும் தெரிவிப்போம். இயந்திரம் பழுது ஆகும் போது அதை பழுது பார்ப்பதற்கு உங்களுக்கு பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளதா அல்லது உங்களுக்கு பழுது பார்ப்பது தெரியும் என்பதால் பழுது பார்க்கிறீர்களா என்றால் இயந்திரத்தை பழுது பார்ப்பது எனக்கு ஒதுக்கப்பட்ட பணி. வழக்கமாக DK Section –ல் 4 இயந்திரங்களுக்கு மூன்று ஆப்ரேட்டர்கள் இருப்பார்களா அல்லது 4 ஆப்ரேட்டர்கள் இருப்பார்களா என்றால் 3 ஆப்பரேட்டர்கள். விபத்து நடந்த இடத்தில் உங்களுடன் அந்த செக்சனில் பணியாற்றிய மற்றொரு ஆப்பரேட்டர் என்ன செய்து கொண்டிருந்தார்என்றால் என்னுடன் பழுது பார்த்து கொண்டிருந்தார். 2 பேரும் பழுது பார்த்ததாக மனுவில் சொல்லாமல் தற்போது

தான் முதன் முறையாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. பெரிய உற்பத்தி தொழிற்சாலையில் சி லைசன்ஸ் உள்ள மெக்கானிக் தான் பணி பார்க்க முடியும் உங்கள் நிறுவனத்தில் அவ்வாறு உள்ளார்களா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நீங்கள் வழக்கிற்காக மெயின்டணன்ஸ் பிரிவு இல்லை என்று பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கு எத்தனை ஆண்டுகள் மெக்கானிக்காக அனுபவம் உள்ளது என்றால் 18 வருடம். எத்தனை மணிக்கு ஷிப்ட் ஆரம்பிக்கும் என்றால் காலை 10 மணி. உங்கள் நிறுவனத்தில் எத்தனை ஷிப்ட் உள்ளது என்றால் ஒரே ஷிப்ட் தான் காலை 10 – இரவு 8.30 மணி வரை. காலை 10 மணிக்கு இயந்திரத்தை ஆன் செய்த 30 நிமிடத்தில் அதுசூடு ஆகிவிடுமா என்றால் ஆட்டோமெடிக் மெஷின் என்பதால் ஆரம்பித்த ஒரிரு நொடிகளிலேயே அது சூடாகிவிடும். ஒரிரு நொடிகளிலேயே அது சூடாகிவிடும் என்று தெரிந்தும் ஓடிக்கொண்டிருக்கும் போது எப்படி கையை விட்டு பழுது பார்த்தீர்கள் என்றால் நான் சூடான இடத்தில் கையை விடவில்லை சூடான இடத்திற்கு அடியில் உள்ள டையில் கையை விட்டு பழுது பார்த்தேன். நீங்கள் சொல்வது உங்களுடைய பிரதான மனுவில் உள்ள 3 வது பத்தியில் கடைசியில் குறிப்பிட்டுள்ளதற்கு முரணாக உள்ளது என்றால் சரியல்ல, சூடான பகுதி டையில் வந்து அழுத்தும் போது தான் கை மாட்டிக்கொண்டது. உங்களுக்கு மெக்கானிக்காக 18 வருடம் அனுபவம் மிக்க நீங்கள் ஒரு ஆட்டோமெடிக் மெஷின் ஓடிக்கொண்டிருக்கும் போது அதன் பாதுகாப்பு கதவை திறந்தால் மெஷின் நின்றுவிடும் என்றால் சரி. ஆட்டோமெடிக் மெஷின் பாதுகாப்பு கதவை திறந்தால் நின்று விடும் என்பது தெரிந்தும் நீங்கள் உரிய உத்தரவு இல்லாமல் பாதுகாப்பு கதவை திறந்துள்ளீர்கள் என்றால் சரியல்ல, இயந்திரத்தில் வேலை நாங்கள் தான் பார்ப்போம் யாரும் சொல்ல தேவையில்லை. அப்படியென்றால் ஆட்டோமெடிக் இயந்திரம் நிற்காமல் ஏன் ஓடிக்கொண்டே இருந்தது என்றால் Bypass– ல் இருந்ததால் அது நிற்கவில்லை. நீங்கள் 18 ஆண்டுகள் அனுபவம் உள்ளதாக சொல்கிறீர்கள்

ஆனால் ஒரு ஆட்டோமெடிக் மெஷின் ஓடிக்கொண்டிருக்கும் போது கைவைத்தால் ஆபத்து என்பது உங்களுக்கு தெரியாதா என்றால் வேறொரு இயந்திரத்தை செட்டிங் செய்து கொண்டிருக்கும் போது இந்த இயந்திரம் பழுதான காரணத்தினால் ஒரு நிமிடத்தில் செய்து விடலாம் என்று பழுது பார்த்தேன். ஆகையால் ஆப்ரேட்டராக பணிஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நீங்கள் ஓடிக்கொண்டிருக்கும் இயந்திரத்தில் நீங்களாகவே பழுது பார்ப்பதற்காக கையை விட்டுள்ளீர்கள் என்றால் ஆப்ரேட்டராகிய நான் தான் பழுது பார்க்க வேண்டும் மேலும் ஓடிக்கொண்டிருந்த இயந்திரம் நின்றபடியால் தான் பழுது பார்த்தேன். நின்று விட்ட இயந்திரம் எவ்வாறு உங்கள் கையை அழுத்தியது என்றால் கப்பை எடுக்கும் போது என் கை மாட்டிக் கொண்டது. நின்ற இயந்திரத்தில் கை எவ்வாறு மாட்டும் என்றால் பழுதை சரி பார்த்த பின்பு இயந்திரத்தை ஓட விட்ட பிறகு கப்பை எடுக்கும் போது கை மாட்டிக் கொண்டது. கப் மாட்டிக் கொண்டதால் தான் பழுது ஏற்பட்டது அவ்வாறு இருக்க கப்பை எடுத்த பிறகு தானே இயந்திரத்தை இயக்கியிருக்க வேண்டும் என்றால் கப்பை கழட்டி வேறு கப்பை மாட்டி இயந்திரத்தை இயக்கினோம் ஆனால் அந்த கப்பும் மாட்டிக்கொண்டது. மறுபடியும் இயந்திரத்தை நிறுத்திவிட்டு தான் அந்த கப்பையும் வெளியே எடுத்திருக்கவேண்டும் என்றால் எனக்கு இரண்டு பக்கத்திலும் இருந்த கப்பும் மற்றும் பீஸ் தீர்ந்து விட்டது ஆகையால் கையை உள்ளே விட்டு கப்பை வெளியே எடுக்க முயற்சித்தேன்.

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் கூறப்பட்டது கணிணியில் தட்டச்சரால் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பித்து அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**தலைமை தாங்கும் அதிகாரி,**
**தொழிலாளர் நீதிமன்றம்,**
**திருச்சி**